**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.**
**நாள். 03.03.2026.**

**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.</u>**
**<u>அசல் வழக்கு எண். 63/2023</u>**

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 03ம் நாள் செவ்வாய்க்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முனுசாமி | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| த/பெ | : | முருகப்பன் | வயது | : | 65 |
| ஊர் | : | வடஇலுப்பை | தொழில் | : | விவசாயம் |

**<u>வா.சா. 1 (முனுசாமி): வாதி தரப்பில் முதல் சாட்சியின் முதல் விசாரணை தொடர்ச்சி:</u>**

நான் ஏற்கனவே என் பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். கீழ்க்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

**கீழ்க்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.**

1. 30.06.1998 தேதியிட்ட வாதி நாராயணன் என்பவரிடம் கிரயம் பெற்ற கிரயப்பத்திரம் அசல் **வா.சா. ஆ.1 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

2. வாதியின் பெயரில் உள்ள பட்டா எண் 443ன் கணினி நகல் **வா.சா.ஆ.2 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

3. வாதி மற்றும் 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள கூட்டுப்பட்டா எண் 1245ன் கணினி நகல் **வா.சா.ஆ.3 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

4. 23.03.2022 தேதியிட்ட வாதி பிரதிவாதிகளுக்கு கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.4 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

5. வாதி கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பை 2, 3 பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல் (எண்ணிக்கை 2) **வா.சா.ஆ.5 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

6. வாதி 4ம் பிரதிவாதி அலுவலகத்தில் தாக்கல் செய்த மேல்முறையீடு நகல் **வா.சா.ஆ.6 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

7. 01.03.2022 தேதியிட்ட 1ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்தி கொடுத்த கிரய ஆவணம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.7 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

8. 05.04.2023 தேதியிட்ட 2ம் பிரதிவாதி அலுவலகத்தில் வாதிக்கு அளித்த மேலெழுத்து கடிதம் அசல் **வா.சா.ஆ.8 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

**தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்**

**(கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

K NALEENI

Digitally signed by K NALEENI
Date: 2026.03.03 17:55:00 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

செய்யாறு